முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.03.2024**, திங்கட்கிழமை

1. சிவஞானியே சூட்சும அவதாரம்
சித்திமிகு வள்ளலாய் எடுத்துமே
அவனியில் பிரணவக் குடில் படைத்து
அரங்கனாய் அற்புதம் நிகழ்த்திட
2. நிகழ்த்திட நிலவுலகம் ஞானபலமாக
நிலைத்தன்மை அடையுமெனக் கூறி
வகைபட துல்லிய ஆசிதனை
வழங்குவேன் சோபகிருது சேல்திங்கள்
3. திங்களிலே பஞ்சதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 05 ம் நாள், 18.03.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் பராசரிஷி யானும்
இங்கனமே உலகநலம்பெற உரைப்பேன்
இணையிலா அன்னதான சேவை
4. சேவைதனை மக்களிடை தானும்
செயல்வடிவாக்கி அருளுகின்ற
சேவைதனில் உலகோர் கலந்து
சீடர்களாக சரணடைவு சொண்டு
5. கொண்டுமே தரும சாலைகளை
குவலயமெங்கும் கிளைகளாக
தொண்டு வழி பெருக்கி வருகவே
தேசிகன் அவதார மகிமைதானும்
6. மகிமைதானும் உலகறியப் பட்டுமே
மண்ணுலகம் தனில் ஞானிகள் படை
அகிலம் காக்கும் மகா சக்தியாக
அறம் வளர்க்கும் நிலைகள் கூடி
7. கூடியே மக்களிடை தயவுநிலை
குறைவிலா குருவருள் பலமாக
நாடியே எங்கும் தெய்வ சக்தி
ஞான சக்தியாக வெளிப்பட்டு

8. வெளிப்பட்டு உலகம் எங்கிலும்
விழிப்புணர்வாக ஞானவான்கள் சபை
அளவிலா சக்தியாக உருவாக
ஆறுமுகப் பெருமான் தலைமை கண்டிட
9. கண்டிடும் வண்ணம் மாற்றம்
கலியினில் ஆறுமுக அரங்கன்
தொண்டர்களால் உருவாக்கப்படும்
தெய்வ சக்திகள் அனுகூலமாகி
10. ஆகியே ஞானத் தலைமையும்
அரங்கனால் வருமுலகில் கண்டு
மகிழவே ஞான சித்தர் காலமும்
மகான்கள் ஆட்சியாக மாறும்
11. மாறுதலை கலியினில் நடத்தும்
மாதவசி அரங்கனே சிறந்த ஞானி
ஆறுமுகனே உம்முள் இருந்து வழி நடத்திட
அகிலம் அறிய அனுகிட அற்புதம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—